[20th April 1960

Sri A. VEDARATHNAM : பசுக்கள் அரியானுப்பசுக்கள் என்று சொல்லப்படுகிறது. என்ன பிரீட் எருமை கிடைக்கிறது ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அரியானுப் பசுக்கள் இலவசமாக கிடைக்கின்றன. இவை நல்ல பசுக்கள், நல்ல தரம். எருமையைப் பொறுத்த வரையிலும் "முர்ரா பிரீட்" வரவழைக்க திட்டம் இருக்கிறது. வரவழைத்துக் கொண்டிருக்கிறோம்.

Manufacture of glass bangles

* 754 *Q*—Sri V. K. KOTHANDARAMAN : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:

(அ) 1957–58, 1958–59 ஆண்டுகளில் கண்ணுடி வளையல்—மாலை—விளையாட்டுச் சாமான்கள் செய்ய பயிற்சி அளிக்கும் தொழிற்சாலைகளில் எவ்வளவு பேர் பயிற்சி பெற்ருர்கள் ?

(ஆ) மேற்படி ஆண்டுகளில் இது போன்ற தொழிற்சாலைகளை நடத்த நமது ராஜ்யத்தில் எந்த எந்த தொழிற்சாலைகளுக்கு எவ்வளவு மானியம் அல்லது கடன் கொடுக்கப்பட்டுள்ளது ? (ஜில்லாவாரியாக)

(இ) இவர்களில் எவ்வளவு பேர்கள் ஹரிஜனங்கள், பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்கள் ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: A statement [a] furnishing the particulars is placed on the table of the house.

Sri V. K. KOTHANDARAMAN : மேஜை மீது வைக்கப்பட்டிருக் கக்கூடிய ஸ்டேட்மெண்டில் பார்த்தால் ஹரிஜனங்கள் ஒன்று, இரண்டு பேர்கள் தான் இந்த பயிற்சியை பெற்றிருக்கிருர்கள். ஹரிஜனங்கள் இந்த பயிற்சியில் சேருவதற்கு மறுத்துவிட்டார்களா ? அல்லது அதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : காரணம் ஒன்று தான். இது விஷயத்தில் யாரையும் நிர்பந்திக்கக் கூடாது. நிர்ப்பந்திப்பது சரியல்ல. யார் இதை உணர்ந்து வருகிருர்களோ, அவர்களுக்குத் தான் இந்தப் பயிற்சி அளிக்கப்படும, அப்படி முன் வருகிறவர்களுக்கு எல்லா வசதிகளும் அளிக்கப்படும். முக்கியமாக ஹரிஜனங்கள் வருவார்களேயானுல், பிரத்யேகமாக அவர்களுக்கு வேண்டியவசதிகள் அளிக்கலாம்.

Dr. (Srimathi) SATHIYAVANIMUTHU : பெண்கள் விரும்பி அணியும் இந்தக் கண்ணுடி வளை தொழிற்சாலையில் எத்தனை பெண் தொழிலாளர்கள் பணி புரிகிருர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இந்தத் தொழிலில் பெண்கள் ஈடுபடுவது ரொம்பவும் பொறுத்தம் என்பதை நானும் உணர்கிறேன். இந்தத் தொழிற்சாலையில் எத்தனை பெண்கள் இருக் கிருர்கள் என்பது பற்றி இப்பொழுது என்னிடம் தகவல் இல்லை.

Sri S. NAGARAJA MONIGAR : இம்மாதிரி தொழிற் சாலைகள் ஆரம்பித்து பயிற்சி கொடுக்கப்படும் இடங்களிலே ஏற்கனவே சம்பிரதாயமாக தலைமுறை தலைமுறையாக இந்தத் தொழிலில் ஈடுபட் டிருந்தவர்களுக்கு பயிற்சி கொடுக்கப்படுகிறது என்பது உண்மையா ? வேறு ஜாதியினரை பொறுக்கி எடுப்பதற்கு தற் போதைக்கு அவசியம் ஏற்படவில்லை, சாத்தியமும் இல்லை என்பது உண்மையா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இதிலே ஜாதி பிரச்னை, தொழில் பிரச்னை ஒன்றுமில்லை. யார் இதற்கு வருகிருர்களோ, யார் தகுதி உள்ளவர்களோ அவர்களுக்கு வசதிகள் அளிக்கப்பட்டு வரு கின்றன.

---

[a] Printed as Appendix II on page 433 infra.